# D E P O S I T I O N  O F  W I T N E S S

--------

## IN THE COURT OF SPECIAL SUBORDINATE JUDGE(MACT), DHARMAPURI.

## CASE NO. M.C.O.P. 178/2023

Deposition of witness for

| | | | | |
|---|---|---|---|---|
| Name: | தங்கராசு | | Caste: | |
| Father Name: | கண்ணன் | | Calling: | சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் |
| Village | கடத்தூர் | | Age | 58 |
| Taluk | கடத்தூர் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.01.2026.

**எ.ம.சா.1 தங்கராசு**

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு முதல் விசாரணை:**

அழைப்பாணையின் பேரில் சாட்சி சொல்ல வந்துள்ளேன். நான் கடத்தூர் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிகிறேன். இந்த வழக்கிற்கு சம்மந்தப்பட்ட விபத்து குறித்து பதிவு செய்யப்பட்ட குற்ற வழக்கில் தயார் செய்யப்பட்ட அழைப்பாணையில் சொல்லியுள்ள ஆவணங்களை நான் கொண்டு வந்துள்ளேன். கடத்தூர் காவல் நிலைய குற்ற எண்.183/2022 சட்ட பிரிவு 279, 337, 338, 304(2) இதச பிரிவு படியான குற்ற வழக்கானது விபத்தில் சம்மந்தப்பட்ட TN 34 U 3397 என்ற லாரி ஓட்டுனர் முருகன் என்பவர் மீது பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி லாரி ஓட்டுனர் முருகன் மீது தான் கடத்தூர் போலிசார் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி இறுதி அறிக்கை நகல் எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி கடத்தூர் போலிசார் தாக்கல் செய்த மாதிரி வரைபடம் நகல் எ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. TN 34 U 3397 என்ற லாரியின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை நகலை தாக்கல் செய்கிறேன். இந்த மோட்டார் வாகன ஆய்வறிக்கை நகல் எ.ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. TN 29 BB 3848 என்ற டாட்டா ஏசி வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை நகலை தாக்கல் செய்கிறேன். இந்த மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை

நகல் எ.ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன். மேற்படி வழக்கில் டாட்டா ஏசி வாகன ஓட்டுனர் செந்தில் குமார் என்பவர் கொடுத்த புகாரின் அடிப்படையில் லாரி ஓட்டுனர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி கடத்தூர் போலிசார் மேற்படி வழக்கை புலன் விசாரணை செய்து விபத்திற்கு காரணம் லாரி ஓட்டுனர் முருகன் என்பவர் தான் என இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள். முதல் தகவல் அறிக்கையில் சுமார் 50 நபர்கள் டாட்டா ஏசி வாகனத்தின் அருகில் நின்று வாகனத்தை நிறுத்தி சுவாமி தரிசனம் செய்து கொண்டு இருந்தபோது டாட்டா ஏசி வாகனத்திற்கு பின்னால் வந்த லாரி அதிவேகமாக வந்து நின்றுகொண்டு இருந்தவர்கள் மீதும், டாட்டா ஏசி வாகனத்தின் மீதும் மோதி விபத்தை ஏற்படுத்தியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோல் தான் இறுதி அறிக்கையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. மனுதாரர் வள்ளியம்மாள் மற்றும் சீனிவாசன் என்பவர்கள் கண்ணுற்ற சாட்சி எண்.12 மற்றும் 13 ஆக விசாரிக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி சாட்சிகள் டாட்டா ஏசி வாகனம் நிறுத்தி இருந்தபோது சுவாமி தரிசனம் செய்து கொண்டு இருந்ததாகவும், மேற்படி வாகனத்திற்கு வந்த லாரி அதிவேகமாக வந்த லாரி மோதி விபத்து ஏற்பட்டுள்ளதாக வாக்குமூலம் அளித்துள்ளார்கள். நான் ஒப்படைத்துள்ள எ.ம.சா.ஆ.3 மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் மேற்படி லாரியின் பர்மிட், தகுதி சான்றிதழ் மற்றும் காப்பீட்டு சான்றிதழ் எதுவும் ஒப்படைக்கப்படவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை.**

நான் குற்ற வழக்கில் புலன் விசாரணை அதிகாரி இல்லை என்றால் சரிதான். புலன் விசாரணைக்கு நான் உதவியாகவும் இல்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் பொதுமக்கள் டாட்டா ஏசி வாகனத்தில் இருந்து தள்ளி போதுமான இடைவெளி விட்டு தான் சென்றார்கள் என்றும், விபத்தின்போது டாட்டா ஏசி வாகன ஓட்டுனர் அந்த வாகனத்தை கவனகுறைவாக ஓட்டி சென்று திடீரென பிரேக் போட்டு நடுரோட்டில் நிறுத்திவிட்டார் என்றும், அதனால் டாட்டா ஏசி வண்டிக்கு பின்னால் வந்த லாரி ஓட்டுனர் செய்வது அறியாது டாட்டா ஏசி வாகனத்தின் மீது லாரி மோதியுள்ளது என்றும், இந்த விபத்திற்கு டாட்டா ஏசி வாகன ஓட்டுனர் தான் காரணம் என்றால் சரியல்ல. டாட்டா ஏசி வாகன ஓட்டுனர் அவர் மீது உள்ள தவறை மறைத்து காவல் நிலையத்தில் லாரி ஓட்டுனர் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. விபத்தை நேரில் பார்த்ததாக சொல்லும் கண்ணுற்ற சாட்சிகளை விசாரித்து பதிவு செய்த வாக்குமூலத்தில் அவர்களிடம் கையொப்பம்

பெறப்பட்டுள்ளதா என்றால் இல்லை. விபத்திற்கு லாரி ஓட்டுனர் காரணமில்லை என்றும், டாட்டா ஏசி வாகன ஓட்டுனர் தான் காரணம் என்றும், புலன் விசாரணை அதிகாரி குற்ற வழக்கை சரிவர புலன் விசாரணை செய்யாமல் தவறாக லாரி ஓட்டுனர் மீது இறுதி அறிக்கை தயார் செய்துள்ளார் என்றால் சரியல்ல. விபத்திற்கு டாட்டா ஏசி வாகன ஓட்டுனர் தான் காரணம் என கூறி காவல் நிலையத்தில் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை ஆட்சேபித்து மறு விசாரணை செய்ய கோரி மனுதாரர்கள் இருவரும் எங்களது காவல் நிலைய ஆய்வாளருக்கும், முதலமைச்சர் தனிபிரிவிற்கும், தருமபுரி மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கும், கூடுதல் மாவட்ட கண்காணிப்பாளருக்கும் புகார் கொடுத்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. மனுதாரர்கள் கொடுத்த புகார் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் இருந்து விட்டு டாட்டா ஏசி வாகன ஓட்டுனருக்கு சாதகமாக லாரி ஓட்டுனர் மீது இறுதி அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கின் மனுதாரர்களை தவிர விபத்தை நேரில் கண்ணுற்றதாக வேறு நபர்கள் யாரும் இவ்வழக்கில் விசாரிக்கவில்லை என்றால் மனுதாரர்கள் உட்பட 3 நபர்கள் தான் கண்ணுற்ற சாட்சிகளாக உள்ளார்கள். மனுதாரர்கள் புலன் விசாரணை அதிகாரியிடம் விபத்திற்கு லாரி வாகன ஓட்டுனர் காரணம் என கூறவில்லை என்றும், டாட்டா ஏசி வாகன ஓட்டுனர் தான் காரணம் என கூறியுள்ளார்கள் என்றும், ஆனால் வேண்டும் என்றே மனுதாரர்களின் விசாரணை வாக்குமூலத்தை மாற்றி எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இது சம்மந்தப்பட்ட குற்ற வழக்கு தருமபுரி முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் SC.No.153/2023 ஆக நிலுவையில் உள்ளது. விபத்திற்கு டாட்டா ஏசி வாகன ஓட்டுனர் தான் காரணம் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

Taken down before/by me in open court and read over/Interpreted to the witness and acknowledged by him/her to be Correct.

S VIPICEE
Digitally signed by S VIPICEE
Date: 2026.01.21 18:17:40 -0900

Special Sub Judge,(MACT)
Dharmapuri.